# தினசரி சந்தை நிலவரம் ஏற்படுத்திய வியத்தகு மாற்றம்

கி.கேசவன்
த/பெ. கோ.கிருஷ்ணமூர்த்தி
1/205, காளியம்மன் கோயில் தெரு
பட்டீச்சுரம் (அஞ்சல்)
தஞ்சாவூர் மாவட்டம்
அ.எண.612703
கைபேசி எண்: 9965477854.



நான் தஞ்சாவூர் மாவட்டம் பட்டீஸ்வரம் கிராமத்தில் வசிக்கும் சிறு விவசாயி. எனக்கு ஒரு ஏக்கர் நஞ்சை நிலம், 50 செண்ட் வாழைத்தோட்டம் மற்றும் ஒரு ஏக்கர் காய்கறித் தோட்டமும் உள்ளது. நஞ்சையில் இருபோக நெல் சாகுபடியும், கோடை நெல் தரிசில் உளுந்து பயிரும், வாழைத்தோட்டத்தில் பூவன், மொந்தன், மற்றும் கற்பூரவல்லி வாழை இரகங்களும் தோட்டக்காலில் கத்தரி, வெண்டை, புடல் ஆகிய காய்கறிகள் ஒவ்வொன்றும் 30 செண்ட் அளவிலும் கீரை 10 செண்டிலும் சாகுபடி செய்து வருகின்றேன்.

பொதுவாக நானும் என்னைப்போன்ற சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் நிலங்களில் சாகுபடி செய்யப்படும் காய்கறிகளையும், மலர்கள், வாழைக்காய் மற்றும் வாழை இலைகள், தேங்காய்கள் ஆகியவற்றை தினந்தோறும் அதிகாலை கும்பகோணம் நேரு மொத்த விலை அங்காடிக்கு எடுத்து சென்று, மொத்த வியாபாரிகள் அன்றாடம் நிர்ணயம் செய்யும் விலைக்கு விற்று வருகின்றோம். விற்ற காய்கறிக்குரிய தொகையை காய்கறிகள் விற்ற பிறகு அன்று மாலையோ அல்லது அடுத்த நாள் காய்கறிகள் அங்காடிக்கு கொண்டு செல்லும் பொழுதோ, மொத்த வியாபாரிகளிடமிருந்து பெற்று வருகின்றோம். இது தற்பொழுது இங்கு நடைமுறையிலுள்ள பழக்கம்.

சென்ற மாதம் கும்பகோணத்தில் பணியாற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக காய், கனி, சந்தைகளின் விலை மதிப்பீட்டாளர் முனைவர்.க.நடராஜன் அவர்கள் எங்கள் கிராமத்திலுள்ள காய்கறி, மற்றும் மலர்கள் பயிரிடும் விவசாயிகளை அணுகி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வரும் மேற்கூறிய திட்டத்தைப்பற்றி தெரிவித்து அன்றைய தினமலரில் வெளிவந்த பல்கலைக்கழக செய்தியினையும் தெரிவித்தார். எங்கள் ஊரில்

கணினி வைத்திருப்பவர்களிடமிருந்து பல்கலைக்கழக காய்கறிகளின் விலைப்பட்டியல் வெளியிடப்படும் இணையத்தளத்தின் மூலம் அன்றாட விலைப்பட்டியலை தெரிந்து கொள்ளும்படியும் தெரிவித்தார். மேலும் அவரே எங்கள் கைப்பேசியின் எண்களை பெற்றுசென்று, அன்றாடம் அவர் எங்கள் காய்கறிகளின் விலையை தெரிந்து கொள்வதுடன் திருச்சி சந்தையின் விலைகளையும் தெரிவிப்பார்கள்.

மேலும் எங்கள் கைப்பேசி எண்களை பதிவு செய்து கொண்டு தினந்தோறும் ஒரு காய்கறியின் இரண்டு சந்தைகளின் விலையை சிறு தகவலாக அனுப்ப ஏற்பாடுகள் செய்துள்ளார். இந்த நல்ல திட்டத்தின் பலனை அறிந்து கொண்டுள்ள என் போன்ற சிறு மற்றும் குறு விவசாயிகள் தற்பொழுது புதிதாக கைபேசிகள் வாங்கி அவற்றின் எண்களை முனைவர் நடராஜன் அவர்களிடம் பதிவு செய்துள்ளார்கள். தற்பொழுது ஒரு சிலருக்கு காய்கறிகளின் விலைப்பட்டியல் சிறுதகவலாக வரத்தொடங்கியுள்ளது.

தற்பொழுது எங்கள் கிராமத்தை சுற்றியுள்ள மற்ற கிராமங்களிலும் விவசாயிகள் இந்த பலனை அடைய முயற்சித்துள்ளார்கள். இந்த நல்ல திட்டம் தொடர்ந்து செயல்பட வேண்டும். மேலும் இது ஒருங்கிணைந்த காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர் மற்றும் நாகை மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தி காய்கறி பயிரிடும் அனைத்து விவசாயிகளும் பலனடைய செய்ய வேண்டும்.

இந்த திட்டத்தில் தற்பொழுது, ஒரு காய்கறியின் இரண்டு சந்தைகளின் விலைத்தகவல் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் என் போன்ற விவசாயிகள் ஒரே சமயத்தில் சிறிய அளவில் இரண்டு மூன்று காய்கறிகள் சாகுபடி செய்து வருகின்றோம். ஆகவே இரண்டு மலர்கள் மற்றும் காய்கறிகளின் திருச்சி சந்தையின் விலைப்பட்டியல் தகவல் அனுப்ப ஏற்பாடு செய்தால் நலம். அதற்கான ஏற்பாடுகள் செய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் செயலாக்கி வரும் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட வேண்டும். அவ்வாறு செயல்பட்டால் காய்கறி சந்தையின் இடைத்தரகர்களின் இடர்பாடுகள் குறைந்து நாங்கள் பயிரிடும் மலர்கள் மற்றும் காய்கறிகள் பயிருக்கு தக்க விலையும் எங்களுக்கு தொடர்ந்து நல்ல வருமானமும் கிடைக்க வழிகிடைக்கும். ஆகவே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இந்த திட்டத்தை தொடர ஆவண செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.